## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 97/2009

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுந்தராஜன் | மதம் | : இந்து |
| த/பெ | : ராதாகிருஷ்ணன் | ஜாதி | : -- |
| வயது | : 47 | கிராமம் | : வீரராகவபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

23.10.2024

<u>பி.வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது பிரமான வாக்குமூலத்தில் வழக்கு சொத்தின் வரிசை எண். 8, 9, 10 மற்றும் 14 குறித்து மட்டுமே விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் உள்ள மற்ற சொத்துக்கள் குறித்து எனக்கு எந்த ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். நான் குறிப்பிட்டுள்ள வழக்கு சொத்தின் வரிசை எண். 8, 9, 10 மற்றும் 14 முதலில் யாருக்கு சொந்தம் என்றால் ரவிக்குமார், சாலம்மாள், ராஜம்மாள் ஆகியோருக்கு பாத்தியம். ரவிக்குமார், சாலம்மாள், ராஜம்மாள் ஆகியோருக்கு எப்படி பாத்தியம் என்றால் தெரியாது. என் அப்பா அவர்களிடமிருந்து வாங்கியுள்ளார்.

2. 8, 9, 10 இலக்க சொத்துக்கள் யாரிடமிருந்து வாங்கினோம் என்றால் ரவிக்குமார், சாலம்மாள் ஆகியோரிடமிருந்து என் அப்பா வாங்கினார். வழக்கு சொத்து ரவிக்குமார், சாலம்மாளுக்கு சொந்தம் என்பதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய தந்தை நீதிமன்றத்தில் 24.08.2015ல் தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரை பற்றி தெரியுமா என்றால் என் அப்பா தாக்கல் செய்தார். அந்த எதிர்வழக்குரையில் வாதி ரமேஷின் தாயார் சாலம்மாள் வரிசை எண்.8ல் புல எண்.261/1ல் மொத்த விஸ்தீரணம் 73 செண்ட்டில் 13 செண்ட்டை செல்லாகிருஷ்ணமூர்த்திக்கு 22.02.1972ல் கிரையம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது தெரியவில்லை. மேற்படி வரிசை எண்.8க்கான கிரைய விவரம் சரியானதா என்றால் எனக்கு அது தெரியவில்லை.

3. என் தந்தை தாக்கல் செய்துள்ள 19.08.2009 ம் தேதியிட்ட எதிர்வழக்குரை பத்தி 5 ல் **"வழக்கு 8, 9, 10 இலக்க சொத்துக்களின் ஆரம்ப உரிமையாளர் செல்லா சாலம்மாள் மற்றும் பலர்"** என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்ட செல்லா சாலம்மாள் மற்றும் பலர் என்பவர்கள் பெயரில் ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் குறிப்பிட்டுள்ள வரிசை எண்.8, 9, 10 மற்றும் 14 இலக்க சொத்துக்களை எந்த தேதியில் என் அப்பா வாங்கினார் என தேதியை என்னுடைய வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தேதி தெரியவில்லை.

4. என் அப்பா தாக்கல் செய்த 19.08.2009 தேதியிட்ட எதிர் வழக்குரையில் வழக்கு சொத்துக்களில் எதிரிடை அனுபவ உரிமை கோரியுள்ளார் என்றால் ஆமாம். என்னுடைய எதிரிடை அனுபவ உரிமையை நிரூபிக்க அடங்கல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் உள்ளது. அடங்கல் என் பெயரில் உள்ளதா என்றால் என் அப்பா பெயரில் உள்ளது. என் அப்பா சொல்வது போல் எதிரிடை அனுபவ உரிமையை நானும் ஏற்றுக்கொள்கிறேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள 06.09.1989 ம் தேதியிட்ட விக்கிரைய பத்திரம் போலியானது மற்றும் பெயரளவிலானது என்றால் இல்லை. ரவிக்குமார், சாலம்மாளிடமிருந்து வாங்கிய ஆவணம் ஆகும்.

5. வருவாய் துறையில் வருவாய் கோட்டாட்சியர் விசாரணை நடத்தி என் அப்பா பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்துள்ளார் என்றால் 15.12.2009 ல் வருவாய் கோட்டாட்சியர் புல எண்.261/1A, 261/2, 261/3, 262/1 ஆகியவை தவிர மற்றவற்றிற்கு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் மேற்படி நிலங்களுக்கு எங்களுக்கு பட்டா கொடுத்தும் உத்தரவிட்டுள்ளார். நான் சொல்லும் கோட்டாட்சியர் உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் என் தந்தை மேல் வந்த பட்டாவே மோசடியானது என ரத்து செய்யப்பட்டு வாதிக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்துள்ள பட்டாவிற்கும் 06.09.1989 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் உள்ள நிலங்களுக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை. என் தந்தை வாங்கிய பத்திரத்திலும் கிரையம் கொடுத்தவர்களுக்கு பூர்வீக சொத்து என்றுதான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள விவரம் தவறானது என்றாலும் வழக்கு சொத்துக்கள் சாலம்மாளுக்கு உரிமையானது என்றாலும்

சாலம்மாளிடமிருந்துதான் நாங்கள் கிரையம் வாங்கினோம். வழக்கு சொத்து முதலில் புடமேகல குப்பையாவிற்கு பாத்தியமாக இருந்து அதன் பின்பு அவரது மகன் முனுசாமிக்கு வந்து அவரிடமிருந்து சாலம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சாலம்மாளிடமிருந்துதான் நாங்கள் கிரையம் வாங்கினோம்.

7. வழக்கு சொத்தின் முழு உரிமையாளரான சாலம்மாளிடமிருந்து 12.10.2006 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் வாதி ரமேஷ் கொடையாக அடைந்துள்ளார் என்றால் சாலம்மாள் எங்களுக்கு விற்ற இடத்தை மீண்டும் ரமேஷுக்கு எழுதியுள்ளார். வாதி வழக்கு சொத்துக்களை முழு உரிமையுடன் அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். எனக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் போலியானது பெயரளவிலானது மற்றும் வழக்கிற்கு சம்பந்தம்மற்றது என்றால் தவறானது. நான் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியப்படி வழக்கு தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)